5. கவன ஈர்ப்பு

அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் பிணவறையைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. முகமது ஆசிப், திரு. எஸ். ஜெயக்குமார், டாக்டர் எம்.பி. சேகர் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. முகமது ஆசிப்.

முற்பகல் 11-40

Thiru Mohamed Asif : Hon. Speaker Sir, I wish to call the attention of the Hon. Minister for Health, to a matter of urgent public importance, namely:-

``The need to improve the condition of the mortuary at Royapettah Government Hospital, Madras."

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் 9 பிணங்கள் வைக்கும் அளவிற்கு பிணவறை 1967-ல் துவக்கப்பட்டது. 1990-ம் ஆண்டு பிணப் பரிசோதனைகள் செய்வது துவக்கப்பட்டது. பிணவறையில் சீர்வளி அமைப்பு பழுதடைந்து விட்டது. 9 பிணங்களே வைக்கக்கூடிய இப்பிணவறை மொத்தத்தில் பற்றாக்குறையாக உள்ளது. பல பிணங்கள் இப்பிணவறைக்குள் கொண்டுவரப்படுவதுடன் நாளொன்றுக்கு சராசரியாக 3-லிருந்து 5 பிணப் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. எனவே குளிர்பதன வசதி கூடிய பிணவறை புதிதாக கட்டுவது மிகவும் அவசியம் என்பதை அறிந்து 1994-95-ம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ. 50.00 லட்சம் செலவில் புதிய பிணவறை குளிரூட்டு வசதிகளுடன் கட்டுவதற்கு நிதி நிலைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இதற்கான பணிகள் நடப்பு ஆண்டில் எடுத்து முடிக்க ஆவன செய்யப்படும். புதிய பிணவறை, தரைத்தளம் மற்றும் முதல் தளம் அடங்கியதாக இருக்கும். தரைத்தளத்தில் அமைய உள்ள புதிய பிணவறையில் மொத்தம் 42 பிணங்களை சீர்வளி அமைப்பில் வைத்துப் பாதுகாக்கலாம். பிரேத பரிசோதனைக் கூடம் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும். மருத்துவர்களுக்காகத் தனி அறைகளும்

அமைக்கப்படும். இப்பிணவறையின் முதல் தளத்தில் ஆய்வுக்கூடம், பதிவறை, பேராசிரியர் மற்றும் உதவிப் பேராசிரியர்களுக்கு அறைகள் அமைக்கப்படும். இக்கட்டிடப் பரப்பு 482.06 சதுர மீட்டர் அளவாகும். தண்ணீர் வசதி மற்றும் கழிவுநீர் வசதிகளை உடையதாகவும் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கத் தேவையான எல்லா வசதிகளையும் உடையதாக இருக்கும்.

* **Thiru Mohamed Asif :** Hon. Speaker Sir, I read the statement of the Hon. Minister for Health. At the outset, I thank on behalf of the people of my constituency and on my own behalf, our beloved and noble Leader, Hon. the Chief Minister, Dr. Puratchi Thalaivi, for sanctioning 50 lakhs for constructing a new mortuary with all modern amenities under Part II Scheme in 1994-95, with A.C. and other facilities and also for the construction of building with accommodation for 42 dead bodies with adequate accommodation for the Doctors, Nurses, Students and for various other purposes. On the total extent, built up area of 482.06 sq. meters will the Hon. Minister expedite the construction of the building? Till the construction of new mortuary, the unclaimed bodies in the mortuary may be diverted either to the G.H. or K.M.C. where the A.C. mortuaries are available and thus avoid health hazard in Royapettah hospital due to accumulation of unclaimed bodies. At the same time, will the Hon. Minister for Health consider to raise the three storeyed new block of hospital in the 9 storeyed building, for which the foundation is already existing and shift the wards and theatres from the old Hospital building which is in a dilapidated condition and use this area for non-clinical purposes, after necessary repairs.

HON. SPEAKER : The Hon. Member has raised two questions.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே கொடுத்ததைப் பொறுத்தவரையில் இந்த மார்ச்சுவரியைப் பொறுத்தவரையில் ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணம் ஒதுக்கி அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இதை வேகப்படுத்தி, விரைவாக இந்தப் பணிகளை முடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதே நேரத்தில் அங்கே வந்து கேட்பாரற்று இருக்கின்ற பிணங்களைப் பொறுத்தவரையில் மற்ற மருத்துவமனைகளில் எங்கெங்கே வசதிகள் இருக்கிறதோ அங்கே அனுப்பச் செய்வதற்கு நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கின்றன. அது தொடர்ந்து செய்யப்படும். மற்ற மருத்துவமனை முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் அவர் கேட்ட

கேள்வியை தனியாக வினாக்கள் மூலமாகவோ அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாகவோ கொடுத்தால் நடவடிக்கைகள் எடுப்பதற்கான நிலைமைகள் பற்றித் தெரிவிக்கப்படும்.

திரு. எஸ். ஜெயக்குமார்: ,மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையிலே 1994-95 ஆம் ஆண்டு பகுதி-2 ஸ்கீமில் 50 லட்சம் ரூபாய் ஒதுக்கிக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேசமயத்தில் அந்தத் தொகுதியினுடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், அப்போதைய அமைச்சருமாக இருந்தவருடைய தலைமையில் இன்று போராட்டம் எல்லாம் அறிவித்து நடத்தியிருக்கிறார்கள். நான் ஒன்றை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். 1990-லே அப்பொழுது சட்டமன்ற உறுப்பினராக இருந்து, அமைச்சராகவும் இருந்து, நேற்று அவர் தலைமையிலே போராட்டம் நடத்துகின்ற அந்த ஆட்சியிலே ஏதாவது நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967 ஆம் ஆண்டு இது துவக்கப்பட்டு இருக்கிறது. 9 பிணங்களையே வைப்பதற்கான வசதிகளோடு, குளிர் சாதன வசதியோடு அது துவக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பிரேத பரிசோதனை செய்வதற்கான எந்த வாய்ப்பும் அப்போது அதிலே ஏற்படுத்தப்படவில்லை. அதற்குப் பின்னாலே 1990 ஆம் ஆண்டு, பிரேத பரிசோதனை செய்வதற்கான உத்தரவை மட்டும் வழங்கி இருக்கிறார்கள். அதற்கான முன்னேற்றத்திற்கான பணமோ அல்லது அதைச் சீர்படுத்துவதற்காக, செம்மைப்படுத்துவதற்காக பணமோ ஒதுக்கப்படவில்லை. ஏற்கெனவே இருந்த வசதியிலே, ஒரு உத்தரவை மட்டும் கூடுதலாகப் போட்டு, அங்கே பிணப் பரிசோதனையையும் செய்யலாம் என்ற உத்தரவு மட்டும் போடப்பட்டிருக்கிறது. அதிலே அந்தச் சோதனை செய்யப்பட்டுக் கொண்டு இருந்திருக்கிறது. ஆனால், நீண்டநெடுங்காலமாக அவ்வளவு முக்கியமான பொறுப்பேற்று, பராமரிப்பு இல்லாத காரணத்தால் அங்கே இருந்த அந்த ஏ.சி. பழுதடைந்துவிட்டது. அதை ரிப்பேர் செய்வதற்காக கடந்த ஆண்டு நாங்கள் எடுத்து ஆய்வு செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டபொழுது, ஏறத்தாழ 2 இலட்சம் ரூபாய்க்கு மேலே செலவாகும்; எனவே அதைச் செலவு செய்து பழைய ஏ.சி.-யைப் புதுப்பிப்பதைவிட புதிதாகப் போடுவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று வல்லுனர்கள் சொல்லிவிட்டார்கள். எனவே, அதற்குப் பின்னாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வந்து இந்தக் கருத்தைச் சொன்னோம்.

அப்போது, மொத்தமாக 9 பிணங்களை வைப்பதற்கு மட்டுமே இடம் இருக்கிறது என்று நான் தெரிவித்தபொழுது, அது எப்படிப் போதும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டார்கள். எனவே, கூடுதலான இடம் தேவை என்று சொன்னபொழுது, அதற்கான முழுத் திட்டத்தோடு வாருங்கள் என்று எங்களுக்குச் சொன்ன பின்னாலேதான், 42 பிணங்களை அங்கே வைப்பதற்காகவும், மிகச் சிறந்த வகையிலே பரிசோதனை செய்கிற வசதியை ஏற்படுத்துவதோடு, மருத்துவர்கள் வந்து அங்கே தங்குவதற்கு இடம், பரிசோதனைக் கூடம் இத்தனையும் உள்ளடக்கிய ஒரு திட்டமாக 50 இலட்சம் ரூபாயிலே இன்றைக்கு அந்தத் திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே பார்ட்-2 ஸ்கீமிலே இது செய்யப்பட்டிருக்கிறது. ஓராண்டுக் காலமாக இதைப்பற்றி பேசி, அதிலே இருப்பதைச் சரி செய்ய முடியாது; தேவையற்றது என்ற நிலைக்கு வந்த பின்னாலேதான் இந்தப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் போராட்டத்தைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், 1990-லே இதற்கான ஒரு உத்தரவைப் போட்டு இருக்கிறார்களேயொழிய, பணம் ஒதுக்கப்படவில்லை. வசதிகள் கூடுதலாகச் செய்யப்படவில்லை. புரட்சித் தலைவி அவர்கள் வந்த பின்னாலேதான் இந்த 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விரைவாக அது முடிக்கப்படும். முடித்த பின்னாலே இந்த சின்னச்சின்ன பிரச்சினைகள்கூட அங்கே இல்லாமல் தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எம். பி. சேகர். (குறுக்கீடு) இதிலே எந்தவிதமான குறுக்கீடும் இருக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் யார் மீதும் குறைபட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை, எல்லாவற்றுக்கும் எழுந்து நின்றுகொண்டு இருந்தால், அது முறையில்லை. உட்காருங்கள். டாக்டர் எம். பி. சேகர்.

டாக்டர் எம். பி. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் மாமன்றத்தால் தூக்கியெறியப்பட்ட மாற்றுக் கட்சிக்காரர்கள் வேண்டுமென்றே மக்கள் மனதைத் திசை திருப்பும் வகையிலே, சாலை மறியல் என்ற போர்வையிலே நேற்று போராட்டம் நடத்தியுள்ளார்கள். அவர்கள் பதவியில் இருந்தபோது எட்டிக்கூட பார்க்காதவர்கள் இப்போது திடீரென்று பாசம் காட்டுவது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. அவர்களுக்கு . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சேகர், இதிலே குற்றச்சாட்டாக இருக்கக் கூடாது, ஏதாவது நீங்கள் விளக்கம் கேட்கலாம்.

டாக்டர் எம். பி. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றி அவர்களுக்குத் தெரிவதற்கு நியாயமில்லை. நமது மாண்புமிகு முதல்வர், முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர், முதல்வராக இருந்து பலகோடி மடங்கு பெருமையைத்

தேடித்தரும் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களது பொன்னான, பொற்கால, நிலையான, நேர்மையான, உண்மையான, ஊழலற்ற, உத்தம, திறமைமிக்க ஆட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய ஆணைப்படிதான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி 50 இலட்சம் ரூபாய்ச் செலவிலே, இந்த ஆண்டிலேயே, 1994-95 ஆம் ஆண்டிலேயே கட்டிமுடிக்க ஆணையிட்டு இருக்கிறார்கள். குளிரூட்டும் வசதியுடன் கட்டி, 42 பிணங்களை சீர்வளி அமைப்பில் வைத்து பாதுகாக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட திறமைமிக்க, பொற்கால ஆட்சியின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை நாம் வாழ்த்தி, அவர்களுடைய சேவையைப் பாராட்டி, நமது தமிழ்நாட்டு மக்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சேகர், கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் எம். பி. சேகர் : பணம் ஒதுக்கியதைத் தெரிந்துகொண்டு வேண்டுமென்றே போராட்டம் நடத்துகிறார்களா என்று அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு அமைச்சர் பதில் சொல்லுவார். உட்காருங்கள்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர், போராட்டம் பற்றி...

முற்பகல் 11.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதை வேண்டாமென்று சொல்லிவிட்டேன் அல்லவா?

திரு. இளம்வழுதி : தலைவரவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்லுவார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டம், இந்தப் பணம் ஒதுக்கப்பட்ட பின்னாலே அதைத் தெரிந்து கொண்டு நடந்ததா என்ன என்பதைப்பற்றி உரியவர்களிடத்தில், போராட்டம் நடத்தியவர்களை வேண்டுமானால் தொடர்பு கொண்டு, நான் கேட்டுச் சொல்கிறேன். இதைத் தெரிந்து கொண்டுதான் நீங்கள் நடத்தினீர்களா என்று வேண்டுமானால் கேட்டுச் சொல்லலாம்.

ஆனால், உண்மை என்னவென்று சொன்னால், இது வெகுநாட்களாகக் கவனிக்கப்படாமல் இருந்து விட்டது. இப்பொழுது ஒன்பது பிணங்கள்

மட்டும்தான் அங்கே வைக்கிற அளவிற்கு இருந்திருக்கிறது. கடந்த காலத்திலே அது விரிவாக்கப்பட்டிருக்க வேண்டும்; விரிவாக்கப்படவில்லை.

இந்த அரசு வந்த பின்னாலே, இந்தப் பிரச்சினைகளை மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்தில் கடந்த ஆண்டு நான் போய்ச் சொன்னேன். உடனே அதை மேலும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்படி சொன்னார்கள். ஆனால், காலம் குறுகிய காலமாக இருந்த காரணத்தால், அந்த உரிய துறைகள்—பி.டபிள்யூ.டி., மற்றும் எங்கள் துறை—இரண்டும் சேர்ந்து அதற்கு ஆய்வை எடுத்துக் கொள்ள வேண்டும். சில தகவல்கள் வருவதற்குக் காலதாமதம்கூட ஏற்பட்டு விட்டது. அப்படியிருந்தாலும்கூட, அந்த பார்ட்-2 ஸ்கீம் டிஸ்கஷன் வருகிறபொழுது இதிலே வருவதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது; ஆனால் மொத்தமாக ஐம்பது இலட்சம் ரூபாய் ஆகும் என்று கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது என்று நான் சொன்னவுடனேயே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள்—அதிலேகூட சிலபேர் சொன்னார்கள், இந்த ஆண்டு கொஞ்சம் குறைத்துக் கொடுக்கலாம், பின்னாலே விரிவாக்கம் செய்து கொள்ளலாமே என்று சொன்னபொழுது, இல்லையில்லை, இது மிக முக்கியமானது, மருத்துவமனையை விட இது முக்கியமானது, எனவே அதற்கு அந்தப் பணத்தை ஒதுக்க வேண்டுமென்று சொல்லி, ஐம்பது இலட்சம் ரூபாயை ஒதுக்கினார்கள். அப்பொழுது எந்தப் போராட்டமோ, இதைப்பற்றி ஒரு அறிக்கையோ எதுவுமே கிடையாது.

பணத்தை ஒதுக்கிய பின்னாலே அந்தப் போராட்டம் வந்திருக்கிறதோ என்பதுதான் மாண்புமிகு உறுப்பினருக்கு ஏற்பட்டிருக்கிற சந்தேகம்.

எனவே, அந்த வகையிலேதான் நடந்து கொண்டிருக்கிறதே ஒழிய, நாங்கள் பணத்தை ஒதுக்குவதற்கான நடவடிக்கையை வேறு யாரும் சொல்லாமலே எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், இதை விரைவாகவே செய்து முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனவேதான் தெளிவாகச் சொல்கிறேன். மொத்தமாக இதற்கான அறிக்கை வந்து சேர்வதற்கு முன்னாலேயேகூட இந்தப் பிரச்சினை யினுடைய முக்கியத்துவத்தை மனதிலே வைத்து அது முக்கியம் என்று கருதி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஐம்பது இலட்சம் ரூபாயை ஒதுக்கினார்கள். நாங்கள் கொடுத்த மொத்தத் திட்டத்திலே இதைச சேர்க்க முடியவில்லை; இது கூடுதலாகக் கொடுத்த ஐம்பது இலட்சம் ரூபாய் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. வே. தம்புசாமி, இருக்கையில் இல்லை.